## பன்வில பிரதேச சபை

## கண்டி மாவட்டம்

------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆம் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூன் 15 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, பன்வில பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நூலக புத்தக மீதி மீட்புப் பதிவேட்டின் படி, ரூபா 1,409,710 தொகையான போதிலும் இது ரூபா 1,394,501 ஆக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்ததன் காரணமாக நூலகப் புத்தகங்கள் ரூபா 15,209 தொகை குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

#### 1.3.2 பெறவேண்டிய கணக்குகள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 16 விடயங்களின் பெறவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,558,552 ஆகக் காணப்பட்டது. இதில் 05 ஆண்டு காலத்திற்கு மேற்பட்டிருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,010,324 ஆகக் காணப்பட்டதுடன் 01 முதல் 05 வருடத்திற்கும் இடையிலான காலத்திற்கு மேற்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,010,864 ஆகக் காணப்பட்டது.

#### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் நிலவிய 02 கடன்கொடுத்தோர் மீதிகளின் கூட்டுத்தொகைப் பெறுமதி ரூபா 8,571,548 ஆகக் காணப்பட்டது.

இதில் 05 ஆண்டு காலத்திற்கு மேற்பட்டிருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,708,041 ஆகக் காணப்பட்டதுடன் 01 இற்கும் 05 இற்கும் இடைப்பட்ட காலத்திற்கு மேற்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,636,879 ஆகக் காணப்பட்டது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 6,210,435 பெறுமதியான 34 காணிகளின் பிரிவுகளுக்கான உறுதி அல்லது பரிமாற்றற் கடடளை சமர்ப்பிக்கப்பட்டிராமையால் அம் மீதியை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைச் சம்பவங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) சுற்றறிக்கை | |
| (i) 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனிகள் தொடர்பாக வேறான ஓர் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 2003 ஏப்ரல் 11 ஆம் திகதிய சீபீசீ/டீஎஸ்06/06/02 ஆம் இலக்க மத்திய மாகாண பிரதான செயலாளரின் சுற்றறிக்கை | 10 உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 34,000 தொகையான பணத்தொகையைப் பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 1980 திசெம்பர் 31 ஆம் திகதிய 1980/46 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை | கடைகளின் மதிப்பீட்டு வாடகை 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை திருத்தப்பட வேண்டிய போதிலும் சபையால் 2009 ஆம் ஆண்டின் பின்னர் புதிய மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) ஏனையவை | |
| 2015 சனவரி 02 ஆம் திகதிய 1896 ஆம் இலக்க இலங்கைக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தல் | ரூபா 72,177 தொகையான 89 விளம்பரப் பலகைகளிற்கான கட்டணம் அறவிடப்பட்டிராமை பன்வில நகர மணிக்கூட்டுக் கோபுரத்தின் இரு மருங்கிலும் உள்ள பிரதான வீதியின் 2015 திசெம்பர் 02 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டது. |

## 2. நிதி மீளாய்வு

------------------------

### 2.1 நிதி விளைவுகள்

------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,857,121 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 390,146 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 1,466,975 தொகையால் அதிகரிப்பொன்று காணப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

----------------------------------

#### 2.2.1 வருமானச் சேகரிப்பின் செயலாற்றல்

---------------------------------------------------------------

செயலாளரால் மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015.01.01 உள்ளவாறானது நிலுவை மீதி | எதிர்காலப் பெறுவனவு | பட்டியல்படுத் தப்பட்டவை | 2015 ஆம் ஆண்டு மிகை அறவீடுகள் | வழங்கப்பட்ட கழிவு/பதி வழிப்புகள் | 2015 பெறுவனவு எதிர்காலப் பெறுவனவு | நிலுவை பெறுவனவு | 2015 பட்டியலிடப்பட்டவற்றில் பெறுவனவு | 2015.12.31 உள்ளவாறானது நிலுவை மீதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரியும் வரியும் | 580,102 | 93,230 | 889,758 | 54,151 | 40,079 | 113,665 | 405,887 | 724,016 | 374,465 |
| குத்தகை | 58,300 | -- | 360,000 | 15,900 | -- | -- | 55,100 | 329,600 | 49,500 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 39,300 | -- | 1,434,100 | -- | -- | 4,000 | 31,300 | 1,424,600 | 21,500 |
| ஏனைய வருமானம் | 1,505,015 | 2,905 | 2,633,308 | 4,604 | -- | 3,970 | 1,241,304 | 1,252,011 | 1,650,677 |
| மொத்தம் | | | | | | | | | 2,096,142 |

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 2,096,142 தொகையான நிலுவை வருமான மீதி அவதானிக்கப்பட்டது.

#### 2.2.2 வீதவரி

-----------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட வீதவரி மீதி ரூபா 322,239 தொகையானதுடன் இந் நிலுவை 01 வருடத்திற்கும் 12 வருடங்களிற்கும் இடையிலான காலப்பகுதிக்கு

உரித்தானதாகும். இது தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 158 ஆம் பிரிவின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 அரசாங்க நிறுவகங்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை மீதி ரூபா 36,078 தொகையானதுடன் இந் நிலுவை 03 மாதங்களிற்கும் 07 வருடங்களிற்கும் இடையிலான காலப்பகுதிக்கு உரித்தானதாகும். இந் நிலுவைத் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 ஏனைய வருமானம்**

**(அ) நீர்க் கட்டணம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2015 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறான நிலுவையான நீர்க் கட்டண வருமானம் ரூபா 186,510 தொகையானதுடன் மீளாய்வாண்டின் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 711,625 ஆகக் காணப்பட்டது. இதில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே ரூபா 135,021 தொகையும் ரூபா 518,415 தொகையும் மாத்திரமே அறவிடப்பட்ட வேண்டியிருந்தது. இந் நிலுவையிலும் பட்டியலிடலிலும் அறவீடுகளின் நூற்றுவீதமாக 72 சதவீதம் காணப்பட்டது. 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான நீர்க் கட்டணம் ரூபா 245,764 ஆகக் காணப்பட்டதுடன் இது தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 158 ஆம் பிரிவின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சபையிடம் உள்ள நீர்த் திட்டத்திற்கு உரித்தான மொத்த நீர்ப் பயன்பாட்டாளர்களின் எண்ணிக்கை 597 ஆகக் காணப்பட்டதுடன் நீர் மானி பொருத்தப்படாது நிலையான நீர்க் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.

**(ஆ) ஏக்கர் வரி**

2015 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறான நிலுவையான ஏக்கர் வரி மீதி ரூபா 50,612 தொகையானதுடன் இதில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் ரூபா 18,366 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. இது நூற்றுவீதமாக 36 சதவீதமாகும். இதன் படி, நிலுவையான ஏக்கர் வரி அறவீடு நலிவான நிலையில் காணப்பட்டது. இவ்வாறே, 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவையான ஏக்கர் வரி மீதி ரூபா 52,226 ஆகக் காணப்பட்டதுடன் இந் நிலுவை 01 முதல் 15 ஆண்டு கால வீச்சிற்கு உரித்தாக நிலவின.

**(இ) முச்சக்கர வண்டிக் கட்டணம்**

2015 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு முச்சக்கர வண்டிக் கட்டணமான ரூபா 127,950 தொகையானதுடன் 2015 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான பட்டியல்படுத்தல்கள் ரூபா 170,000 ஆகக் காணப்பட்டது. இதில் 2015 திசெம்பர் 31 வரையிலும் முறையே ரூபா 60,410 தொகையும் ரூபா 43,490 தொகையும் மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. இது நூற்றுவீதமாக முறையே 47 சதவீதமாகவும் 25 சதவீதமாகவும் காணப்பட்டது. இதன் படி, முச்சக்கர வண்டிக் கட்டணத்தை அறவிடுவது நலிவான நிலையில் காணப்பட்டதுடன் 2015 திசெம்பர் 31 வரையில் பதிவாகியிருந்த 103 முச்சக்கர வண்டிகளில் ரூபா 149,050 தொகை நிலுவையாகக் காணப்பட்டதுடன் இந் நிலுவை 01 முதல் 03 ஆண்டு கால வீச்சிற்கு உரித்தானவையாகக் காணப்பட்டது. இத் தொகை அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) விளம்பர அறிவிப்புப் பலகை**

2015 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவையான விளம்பர அறிவிப்புப் பலகைக் கட்டணம் ரூபா 81,027 தொகையானதுடன் இதில் 2015 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 14,940 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. இது நூற்றுவீதமாக 18 சதவீதமாகக் காணப்பட்டது. இவ்வாறே, 2015 ஆம் ஆண்டின் விளம்பர அறிவிப்புப் பலகை பட்டியலிடல் ரூபா 135,427 தொகையானதுடன் இதில் எத் தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. இதன் படி, விளம்பர அறிவிப்புப் பலகைக் கட்டண அறவீடு நலிவான நிலையில் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலற்றல் மதிப்பீடு

முன்னைய ஆண்டின் போது அபிவிருத்தித் திட்டத்தைப் பெற்று முன்னுரிமையைத் தயாரித்து எதிர்வரும் ஆண்டின் போது செயற்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டு செயற்திட்டத்திற்காக முறையான வகையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் மதிப்பீட்டைப் பெற்று பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், கட்டிடத்தை மேம்படுத்துவதற்காகவும் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகவும் ரூபா 10,831,000 தொகையான மொத்த மீதியாகப் பயன்படுத்தப்பட்டு பாதீடு தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

### 3.2 செயற்பாட்டு திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) குப்பைகளை அகற்றுவதற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்த மொறஹெல பிரதேசக் காணி மற்றும் ஹுலு கங்கை பிரதேசத்தின் 01 ஏக்கர்

அளவிலான காணியில் சிறிய காணி குப்பைகளை அகற்றுவதற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், எஞ்சிய காணி அளவு ஆக்கபூர்வமான நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அத்துமீறிய நிர்மாணிப்புகள் தொடர்பாக 2015 திசெம்பர் 02 ஆம் திகதி சில பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது 05 அத்துமீறிய நிர்மாணிப்புகள் அவதானிக்கப்பட்டதுடன் அந் நிர்மாணிப்புகள் தொடர்பாக கட்டணம் அறவிடப்பட்டு, ஒழுங்குபடுத்துவதற்கோ அல்லது அவ்வாறு செய்யப்பட முடியாத நிர்மாணிப்புகள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

உக்கலடைபவை மற்றும் உக்கலடையாதவை என கழிவுப் பொருட்கள் வகைப்படுத்தப்பட்டு சேகரிக்கப்பட்டு அகற்றப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், எந்தவித நடைமுறையும் பின்பற்றப்படாது உக்கலடையும் மற்றும் உக்கலடையாத சகல கழிவுப் பொருட்களும் ஒன்றாகச் சேகரிக்கப்பட்டு, மொறஹெல மற்றும் ஹுலு கங்கை பிரதேசத்தின் இடங்களில் அகற்றப்பட்டிருந்தன. இவ்வாறே அவ் வீதிக்கு அருகாமையில் சரிவான இடம் உள்ளமையால் கீழ் உள்ள நிலத்திற்கு குப்பைகள் தள்ளுப்பட்டுச் செல்வதனால் மழை நீருடன் கலந்து கீழ் பகுதிகளில் நீர் மூலங்கள் அசுத்தம் அடைவதற்கான இடம் உள்ளதாக 2015 திசெம்பர் 02 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது கண்டறியப்பட்டது.

## 3.4 சுற்றாடல் பிரச்சனைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) குப்பைகள் அகற்றப்படும் இடத்திற்கு அண்மையில் உள்ள பிரதேசங்கள் மிகவும் துர்நாற்றத்துடன் உள்ள போதிலும் இதற்காக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மொறஹெல குப்பை அகற்றும் இடத்திற்கு அண்மையில் விற்பனை செய்யப்படக் கூடிய குப்பைப் பொருட்களைச் சேர்க்கும் அத்துமீறிய ஓர் இடம் இயங்கிவந்ததுடன், வெளிப்படையாக இப் பொருட்கள் வைக்கப்பட்டிருந்தமையால் அங்குள்ள டின்கள் மற்றும் பிளாஸ்டிக் பகுதிகளில் மழை நீர் தேங்கியிருந்தமையும் 2015 திசெம்பர் 02 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக ஆய்வின் போது அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக சுகாதாரத்திற்குப் பங்கம் ஏற்படும் கூடுதலான வாய்ப்பு நிலவியது.

(இ) உலக பாரம்பரியமான நக்கிள்ஸ் சரணாலயத்திற்கு அண்மையில் உள்ள பல்லுயிர் வாழ் வனப்பகுதியாக பிரகடனப்படுத்தப்பட்ட

நிலப்பகுதிக்கு முறையான முகாமைத்துவம் இன்றி குப்பை அகற்றப்படுவதன் காரணமாக சுற்றாடல் பிரச்சனைகள் உருவாகி உள்ளன.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம், மதிப்பீட்டு வருமானங்கள் மற்றும் செலவுகள், உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவுகளுடன் ஒப்பிடப்படுகையில் 04 வருமான விடயங்களில் நூற்றிற்கு 15 முதல் 97 சதவீதம் வரையிலும், 07 செலவு விடயங்களில் நூற்றிற்கு 17 முதல் 95 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

**விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

ரூபா 6,035,600 பெறுமதியான டம்ப் டிரக் வண்டியும் டிரேலர் வண்டியும் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டதுடன் ரூபா 525,000 பெறுமதியான 02 மோட்டார் சைக்கிள்களும் கை உழவு இயந்திரங்களும் 01 முதல் 09 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காரலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) உள்ளகக் கட்டுப்பாடு

(ஆ) கணக்கீடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) கடன்பட்டோர்/ கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

(ஊ) ஒப்பந்த நிருவாகம்